**பிரதமர் அவர்கள் 14வது இந்தியா-பிரான்ஸ் தலைமை நிர்வாக அதிகாரிகள் மன்றத்தில் உரையாற்றினார் (பிப்ரவரி 11, 2025)**

பிப்ரவரி 11, 2025

பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்கள் மற்றும் பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மேக்ரோன் இருவரும் இன்று பாரிசில் 14-வது இந்தியா-பிரான்ஸ் சிஇஓ-கள் மன்றத்தில் உரையாற்றினர். பாதுகாப்பு, ஏரோஸ்பேஸ், முக்கியமான மற்றும் வளர்ந்து வரும் தொழில்நுட்பங்கள், உள்கட்டமைப்பு, மேம்பட்ட உற்பத்தி, செயற்கை நுண்ணறிவு, வாழ்க்கை அறிவியல், ஆரோக்கியம் மற்றும் வாழ்க்கை முறை மற்றும் உணவு மற்றும் விருந்தோம்பல் போன்ற துறைகளில் கவனம் செலுத்தும் பல்வேறு நிறுவனங்களின் சிஇஓ-களை இந்த சந்திப்பு ஒன்றிணைத்தது.

2. இந்தியா-பிரான்ஸ் வணிகம் மற்றும் பொருளாதார ஒத்துழைப்பை விரிவுபடுத்துவதையும், இரு நாடுகளுக்கும் இடையிலான மூலோபாய கூட்டாண்மைக்கு உந்துதல் வழங்குவதையும் பிரதமர் தனது உரையில் குறிப்பிட்டார். அதன் நிலையான மற்றும் கணிக்கக்கூடிய கொள்கை சுற்றுச்சூழல் அமைப்பின் அடிப்படையில், உலகளாவிய முதலீட்டு இடமாக இந்தியா இருப்பதை அவர் எடுத்துரைத்தார்.  சமீபத்திய பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்ட சீர்திருத்தங்கள் குறித்து பேசிய பிரதமர், காப்பீட்டுத் துறை இப்போது 100% FDI ஆக உள்ளது என்றும் மற்றும் சிவில் அணுசக்தித் துறைக்கு SMR மற்றும் AMR தொழில்நுட்பங்களில் தனியார் பங்கேற்பை பெற்றுள்ளது என்றும்; சுங்க கட்டணங்கள் குறைக்கப்பட்டது என்றும்; வாழ்க்கையை எளிதாக்க எளிமையான வருமான வரி குறியீடு கொண்டுவரப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். சீர்திருத்தங்களைத் தொடர அரசாங்கத்தின் உறுதிப்பாட்டைக் குறிப்பிட்ட அவர், நம்பிக்கை அடிப்படையிலான பொருளாதார நிர்வாகத்தை நிறுவுவதற்காக ஒழுங்குமுறை சீர்திருத்தங்களுக்கான உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டார்.

அதே உணர்வில், கடந்த சில ஆண்டுகளில் 40,000 க்கும் மேற்பட்ட இணக்கங்கள் சீரமைக்கப்பட்டன என்றும் கூறினார்.

3. பாதுகாப்பு, எரிசக்தி, நெடுஞ்சாலை, சிவில் ஏவியேஷன், விண்வெளி, சுகாதாரம், ஃபின்டெக் மற்றும் நிலையான வளர்ச்சித் துறைகளில் இந்தியாவின் வளர்ச்சியால் வழங்கப்படும் மகத்தான வாய்ப்புகளைப் பார்க்க பிரதமர் பிரெஞ்சு நிறுவனங்களை அழைத்தார். இந்தியாவின் திறன்கள், திறமை மற்றும் கண்டுபிடிப்பு ஆகியவற்றில் உலகளாவிய பாராட்டு மற்றும் ஆர்வத்தை கோடிட்டுக்காட்டிய அவர், புதிதாக தொடங்கப்பட்ட AI, செமிகண்டக்டர், குவாண்டம், முக்கியமான கனிமங்கள் மற்றும் ஹைட்ரஜன் மிஷன்களில், பரஸ்பர வளர்ச்சி மற்றும் செழிப்புக்காக இந்தியாவை பங்குபெற பிரெஞ்சு நிறுவனங்களுக்கு அழைப்பு விடுத்தார். இந்தத் துறைகளில் ஈடுபடுவதற்கான முக்கியத்துவத்தை அவர் கோடிட்டுக்காட்டினார், புதுமை, முதலீடு மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த கூட்டாண்மைகளை வளர்ப்பதற்கான இரு நாடுகளின் உறுதிப்பாட்டை மீண்டும் பிரதமர் உறுதிப்படுத்தினார். பிரதமரின் முழு கருத்துக்களையும் இங்கே காணலாம்

4. வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர். S. ஜெய்சங்கர் அவர்கள், பிரான்சின் ஐரோப்பா மற்றும் வெளியுறவு விவகார அமைச்சர் மாண்புமிகு ஜீன் நோயல் பாரட், மற்றும் பிரான்சின் பொருளாதாரம், நிதி மற்றும் தொழில்துறை மற்றும் டிஜிட்டல் கட்டுபாட்டு அமைச்சர் மாண்புமிகு எரிக் லோம்பார்டு ஆகியோரும் மாநாட்டில் உரையாற்றினார்.

5. கூட்டத்தில் கலந்துகொண்ட இரு தரப்பினரின் சிஇஓ-கள்:

**இந்திய தரப்பு:**

| | நிறுவனத்தின் பெயர் (துறை) | பெயர் மற்றும் பதவி |
|---|---|---|
| 1 | ஜூபிலியன்ட் ஃபுட்ஸ்வொர்க்ஸ்/ஜூபிலியன்ட் லைஃப் சயின்சஸ், ஃபுட் அண்ட் பெவரேஜ் | ஹரி பாரதியா, இணை-தலைவர் மற்றும் இயக்குநர் |
| 2 | CII | சந்திரஜித் பானர்ஜி, தலைமை இயக்குநர் |
| 3 | திதாகர் இரயில் சிஸ்டம்ஸ் லிமிடெட் (TRSL), இரயில்வே மற்றும் உள்கட்டமைப்பு | உமேஷ் சௌத்ரி, துணைத் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் |
| 4 | பாரத் லைட் & பவர் பிரைவேட் லிமிடெட், (ரினியூவபிள் எனர்ஜி) | தேஜ்ப்ரீத் சோப்ரா, தலைவர் & சிஇஓ |
| 5 | P மஃபத்லால் குரூப், ஜவுளி மற்றும் தொழில்துறை தயாரிப்புகள் | விஷாத் மஃபத்லால், தலைவர் |
| 6 | போட், கன்ஸ்யூமர் எலக்ட்ரானிக்ஸ் (அணியக்கூடியவை) | அமன் குப்தா, இணை நிறுவனர் |

| | | |
|---|---|---|
| 7 | தலித் இந்தியன் சேம்பர் ஆஃப் காமர்ஸ் & இண்டஸ்ட்ரி (DICCI), பிசினஸ் அட்வகசி அண்ட் இன்க்ளூஷன் | மிலிந்த் கம்ப்ளே, நிறுவனர்/தலைவர் |
| 8 | ஸ்கைரூட் ஏரோஸ்பேஸ், ஏரோஸ்பேஸ் & ஸ்பேஸ் அண்ட் டெக்னாலஜி | பவன் குமார் சந்தனா, இணை நிறுவனர் |
| 9 | அக்னிகுல், ஏரோஸ்பேஸ் & ஸ்பேஸ் அண்ட் டெக்னாலஜி | ஸ்ரீநாத் ரவிச்சந்திரன், இணை நிறுவனர் & சிஇஓ |
| 10 | டாடா அட்வான்ஸ்டு சிஸ்டம்ஸ் லிமிடெட், ஏரோஸ்பேஸ் அண்ட் டிஃபென்ஸ் | சுக்கிரன் சிங், நிர்வாக இயக்குநர் |
| 11 | UPL குரூப், அக்ரோகெமிக்கல் மற்றும் அக்ரிபிசினஸ் | விக்ரம் ஷ்ராஃப், துணைத் தலைவர் மற்றும் துணை-சிஇஓ |
| 12 | சூலா வைன்யார்ட்ஸ், ஃபுட் அண்ட் பெவரேஜ் | ராஜீவ் சமந்த், சிஇஓ |

| | | |
|---|---|---|
| 13 | டைனமேட்டிக் டெக்னாலஜிஸ் லிமிடெட், ஏரோஸ்பேஸ் & டிஃபென்ஸ், அண்ட் இன்ஜினியரிங் | உதயந்த் மல்ஹோத்ரா, சிஇஓ & நிர்வாக இயக்குநர் |
| 14 | டாடா கன்சல்டிங் இன்ஜினியர்ஸ் (TCE), இன்ஜினியரிங் அண்ட் கன்சல்டிங் | அமித் ஷர்மா, நிர்வாக இயக்குநர் & சிஇஓ |
| 15. | நைகா, காஸ்மெட்டிக்ஸ் அண்ட் கன்ஸ்யூமர் குட்ஸ் | ஃபல்குனி நாயர், சிஇஓ |

ஃபிரெஞ்ச் தரப்பு:

| | நிறுவனத்தின் பெயர் (துறை) | பெயர் மற்றும் பதவி |
|---|---|---|
| 1 | ஏர் பஸ், ஏரோஸ்பேஸ் & டிஃபென்ஸ் | கில்லாம் ஃபாரி, சிஇஓ |
| 2 | ஏர் லிக்விட், கெமிக்கல்ஸ், ஹெல்த் கேர், இன்ஜினியரிங் | ஃபிரான்காய்ஸ் ஜாக்கோ, சிஇஓ & ஏர் லிக்விட் குழுமத்தின் இயக்குநர்கள் குழு உறுப்பினர் |

| | | |
|---|---|---|
| 3 | பிளாபிளாகார், டிரான்ஸ்போர்ட், சர்வீசஸ் | நிக்கோலஸ் பிரசன், சிஇஓ & துணை நிறுவனர் |
| 4 | கேப்ஜெமினி குரூப், இன்ஃபர்மேஷன் டெக்னாலஜி, இன்ஜினியரிங் | அய்மன் இசாத், சிஇஓ |
| 5 | டேனோன், ஃபுட் & பெவரேஜஸ் | ஆன்டோயின் டி செயிண்ட்-ஆஃப்ரிக், சிஇஓ |
| 6 | EDF, எனர்ஜி, பவர் | லூக் ரெமன்ட், தலைவர் &சிஇஓ |
| 7 | இஜிஸ் குரூப், ஆர்கிடெக்சர் கன்ஸ்ட்ரக்ஷன் இன்ஜினியரிங் | லாரன்ட் ஜெர்மைன், சிஇஓ |
| 8 | என்ஜி குரூப், எனர்ஜி, ரினியூவபிள் எனர்ஜி | கேத்தரின் மெக்ரிகர், சிஇஓ & என்ஜி நிறுவன உறுப்பினர். |
| 9 | லோரியல், காஸ்மெட்டிக்ஸ் & கன்ஸ்யூமர் குட்ஸ் | நிக்கோலாஸ் ஹீரோனிமஸ், சிஇஓ & இயக்குநர்கள் குழு உறுப்பினர் |

| | | |
|---|---|---|
| 10 | மிஸ்ட்ரல் AI, ஆர்டி்ஃபிஷியல் இன்டெலிஜென்ஸ் | ஆர்தர் மென்ஷ், சிஇஓ & இணை-நிறுவனர் |
| 11 | நேவல் குரூப், டி்ஃபென்ஸ், ஷிப்பில்டிங், இன்ஜினியரிங் | பியர் எரிக் பாம்லெட், தலைவர் & சிஇஓ |
| 12 | பெர்னோட் ரிகார்டு, ஆல்கஹால் பெவரேஜஸ், FMCG | அலெக்சாண்டர் ரிகார்டு, தலைவர் & சிஇஓ |
| 13 | ச்ஃப்ரான், ஏரோஸ்பேஸ் & டி்ஃபென்ஸ் | ஒலிவியர் ஆண்ட்ரியஸ், சிஇஓ |
| 14 | சர்வியர், ்ஃபார்மசிட்டிக்கல்ஸ், ஹெல்த் கேர் | ஒலிவியர் லாரோ, தலைவர் & சிஇஓ |
| 15 | டோட்டல் எனர்ஜிஸ் SE, எனர்ஜி | பேட்ரிக் பாயன், தலைவர் & சிஇஓ |
| 16 | விகாட், கன்ஸ்ட்ரக்ஷன் | கை சிடோஸ், தலைவர் & சிஇஓ |

பாரிஸ்

பிப்ரவரி 11, 2025